**செய்தி வெளியீடு எண்:899** **நாள்:23.11.2020**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

## செய்தி வெளியீடு

**91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் தொடங்கிவைத்தார்.**

மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவிப்பு செய்தபடி, தமிழகத்திலுள்ள 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களை சென்னையிலுள்ள தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின்; கூட்ட அரங்கில் இன்று (23.11.2020) நடைபெற்ற விழாவில்; தொடங்கி வைத்தார்.

இந்தப் புதுமையான திட்டத்தின் தொடக்க விழாவில் பேசிய உயர்கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சமூகத்திலுள்ள சவால்களை எதிர் கொள்ளவும் அறிவுத் திறனை மேம்படுத்திக் கொள்ளவும் விரும்பும் கற்போர்களுக்கு திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கற்றல் முறை மூலம் உயர்கல்வியை அளிப்பதில் முக்கியப் பங்காற்றி வருகிறது என்றும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் 42 இளநிலை மற்றும் 38 முதுநிலைப ;படிப்புகளும் பல்கலைக்கழக நிதி நல்கைகுழுவின் அங்கீகாரம் பெற்றவை என்றும் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் முறைசார் கல்வி முறையில் வழங்கப்படும் படிப்புகள் அனைத்தும் அரசு மற்றும்; பொதுத் துறைகளில் வேலை வாய்ப்பிற்கும் பதவி உயர்விற்கும் தகுதி பெற்றவை என்றும் குறிப்பிட்டார்கள்.

இந்தத் தொடக்க விழாவில் கலந்து கொண்ட உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் செல்வி அபுர்வா, இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அமைக்கப்பட்டதன் மூலம் ஆர்வம் உள்ள மாணாக்கர்கள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் திறன் மேம்பாடு சார்ந்த 16 குறுகியகாலப் படிப்புகள், 24 சான்றிதழ் படிப்புகள், 4 பட்டயப் படிப்புகள், 14 தொழிற்கல்வி பட்டயபடிப்புகள் மற்றும் 2 மேற்பட்டய படிப்புகளில் சேர்ந்து பயிலும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். மேலும் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் அனைத்துப் படிப்புகளுக்கும் தானேகற்றல் முறையில் வடிவமைக்கப்பட்ட உயர் தரம் மிக்க பாடநூல்கள் வழங்கப்படுகின்றன என்றும், இப்படிப்புகளில் சேர்ந்து படிக்க விரும்புவோர் இணைய வழியிலும் சேரலாம் என்றும் குறிப்பிட்டார்கள்.

கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களைத் தொடங்கி வைத்த மாண்புமிகு உயர்கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் அரசுக் கல்லூரிகளில் அமைந்துள்ள கற்போர் உதவி மையங்களில் இணையவழியில் மாணக்கர்; சேர்க்கையினைத் தொடங்கி வைத்ததோடு, படிப்புகளில் சேர்க்கை பெற்ற சில கற்போர்களுக்கு தானே கற்றல் முறை பாடநூல்கள் மற்றும் அடையாளஅட்டையினையும் வழங்கினார்கள்.

மேலும் தொடர்ந்து பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரடி முறையில் கல்லூரிகளில் தாங்கள் விரும்பிய படிப்புகளில் சேர்ந்து பயில விண்ணப்பம் செய்து வாய்ப்பு கிடைக்காதவர்கள், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் அதே படிப்புகளில் சேர்ந்து படிக்க முடியும் என்றும், ஏற்கனவே நேரடி முறையில் கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வரும் மாணாக்கர்கள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் திறன்சார் படிப்புகளில் சேர்ந்து தங்களின் வேலை வாய்ப்பு தகுதிகளை வளர்த்துக் கொள்ளலாம் என்றும், இவ்வாறான படிப்புகளில் சேர்ந்து பயின்று தேர்ச்சி பெறும் மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழத்தால் பட்டங்கள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டதோடு, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களைஅரசின் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அமைத்துள்ளதன் மூலம் இதுவரை கல்வி வாய்ப்புகள் கிடைக்கப் பெறாதவர்களும் கல்வி பெறுவதற்கான ஒரு அரிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இந்தத் திட்டமானது இந்தியப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும் என்றும் குறிப்பிட்டார்கள்.

இந்தத் தொடக்க விழாவில், கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் இயக்குநர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர், கோ. பார்த்தசாரதி அவர்கள், தமிழ்நாடு திறந்தநிலைப்; பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் கே. ரத்னகுமார் அவர்கள் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பதிவாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**